[1969 செப்டம்பர் 12

முதலில் வழங்கப்படுகிறது. அவர்களுக்கு வழங்கப்பட்டதற்குப் பிறகு, மற்றவர்களுக்கும் முறையாக அந்தந்தச் சலுகைகள் வழங்கப்பட இருக்கின்றன. ஒரு கிளர்ச்சி நடத்திய பிறகுதான் வழங்க வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்கு இருப்பதில்லை. கிளர்ச்சி எதுவும் வர இடமில்லாமலே செய்ய வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில், முன்கூட்டியே செய்யவேண்டும் என்று அரசு எண்ணிக் கொண்டிருக்கிறது. ஆகவே, அது பரிசிலனையில் இருந்து வருகிறது. விரைவில் பரிசிலனை செய்து முடிக்க வேண்டிய எண்ணமும் அரசுக்கு இருக்கிறது.

கிளை நூலகங்களுக்கு நூல்கள் வாங்கும் முறை

* 234 வினா.—திரு. ந. தருமலிங்கம்: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசினர் உதவி பெற்று இயங்கி வரும் கிளை நூலகங்களுக்கு நூல்கள் வாங்குவதில் கடைப்பிடிக்கப்படும் விதி முறைகள் யாவை?

(இ) இதனை திருத்தியமைக்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) அரசாங்க மானியம் பெறும் நூலகங்களில் வாங்கப்படும் நூல்கள், வெளியீடுகள், பத்திரிகைகள் இவற்றின் தேவைப் பட்டியலுக்கு உள்ளூர் நூலக அதிகாரமன்றத்தின் முன் ஒப்புதலைப் பெற வேண்டும். வாங்கப்படும் நூல்கள், வெளியீடுகள், பத்திரிகைகள், இவை கீழே கூறப்பட்ட நிபந்தனைகளை நிறைவு செய்யவேண்டும்.

(1) அவை பொதுவாக பலரும் விரும்பி படிக்கத்தக்கவையாகவும், பண்பாடு மதிப்புடையனவாகவும் இருக்கவேண்டும்.

(2) நூல்கள் நாவல்களாகவோ, கதைகளாகவோ இருக்குமானால் தரமான எழுத்தாளர்களுடையதாக இருக்கவேண்டுமே அன்றி, தரங்கெட்டவையோ என்ற ஐயுறவுக்கு இடமளிப்பவையாக இருக்கக்கூடாது.

(3) சில வகுப்பினரையோ, சமயங்களையோ, இழிவு படுத்தும் நூல்கள், வெளியீடுகள், பத்திரிகைகள் ஆகிய இவற்றை வாங்கக்கூடாது.

(4) தரங்கெட்டவையோ என்ற ஐயுறவுக்கு இடமளிப்பவையாக உள்ள அல்லது விரும்பத்தகாத படங்களை உடைய நூல்கள், வெளியீடுகள், பத்திரிகைகளை வாங்கக்கூடாது.

(இ) இல்லை.

திரு. ந. தருமலிங்கம்: தலைவர் அவர்களே, காலஞ்சென்ற நம்முடைய அண்ணா அவர்கள் மிகச் சிறந்த பேரறிஞர் என்பது நாடறிந்த உண்மை ஆகும். அவர் எழுதிய சிறந்த நூல்களும் ஏடுகளும் அரசாங்கத்தினுடைய மானியம் பெறும் நூலகங்களில் பெரும்பாலும் இல்லை. இதை மாற்றியமைக்க அரசு திட்டம் வைத்திருக்கிறதா?

1969 செப்டம்பர் 12]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி, அந்தந்தக் கிளை நூலகங்களினுடைய அதிகாரம் பெற்ற மன்றங்களின் மூலமாகத்தான் நூல்கள் வாங்கப்படுகின்றன. பல நூலகங்களில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நூல்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவ்வப்போது வெளி வருகின்ற நூல்களைப் பொறுத்து, அவர்களே தேர்ந்தெடுக்கும் முறை அமைந்திருக்கிறது. அப்படி வைக்கக் கூடாது என்ற தடை ஏதும் இல்லை. ஆங்காங்கு இருக்கும் கிளை நூலகங்களை நடத்துவதற்குப் பொறுப்பாக உள்ள மன்றங்கள் மூலம் நூல்கள் தெரிந்தெடுக்கப்படுகின்றன. பேரறிஞர் அண்ணா அவர்களின் நூல்களும் வைக்கப்பட்டிருக்கின்றன.

THIRU K. VINAYAKAM : Sir, with regard to the books written by our late Chief Minister, are the Government aware of the fact that many books written by him in his school days were banned by the then Government in those days. Now, will the present Government consider the question of removing the ban on those books . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வியை நான் அனுமதிக்கவில்லை.

மதுராந்தகத்தில் பெண்கள் உயர்நிலைப்பள்ளி

*235 வினா.—**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுராந்தகத்தில் ஒரு பெண்கள் உயர்நிலைப்பள்ளி துவங்கும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, மதுராந்தகம் நகரத்தில் இருக்கும் ஒரே ஒரு உயர்நிலைப்பள்ளி தனியார் உயர்நிலைப் பள்ளியாகும். அங்கே ஒரு பெண்கள் உயர்நிலைப்பள்ளி ஏற்படுத்த வேண்டுமானால், அதற்கு நிலம் தேவை என்று சர்க்கார் கேட்கிறார்கள். நகரத்திற்குள்ளே நிலம் இல்லை ; ஏறக்குறைய இரண்டு மைலுக்கு அப்பால்தான் நிலம் தரும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, நகரத்தில் குறைந்த அளவுக்கு நிலம் கொடுத்தாலும் அங்கே பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : உயர்நிலைப்பள்ளி வைக்கப்படுவதற்கு சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. ஐந்து மைல் சுற்றுவட்டாரத்தில் வேறொரு உயர்நிலைப்பள்ளி இருக்கக் கூடாது என்றும், அதற்கு ஐந்து ஏக்கர் நிலம் இருக்க வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மதுராந்தகத்தில் பெண்கள் உயர்நிலைப்பள்ளி அமைக்க வேண்டும் என்று